**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு. M. சந்திரமோகன், B.A., B.L**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

2026–ம் ஆண்டு ஜூன் மாதம்–23 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**<u>அசல் வழக்கு எண். 160/2022</u>**

**<u>CNR No. TNMY070002412022</u>**

கிருஷ்ணமூர்த்தி ..வாதி

...எதிர்...

1. முருகன்
2. வத்சலா
3. இளையராஜா ...பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என் முன்பாக இன்று 23.06.2026 இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J. சங்கர் அவர்கள் ஆஜராகியிருந்தும், 1ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டும், 2,3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.K. ராமகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியிருந்தும், இவ்வழக்கானது சிறப்புப் பட்டியலில் போடப்பட்டிருந்தும், வாதி தரப்பில் வழக்கை மேல் நடத்த தயாராக இல்லை என்பதால், வாதி தவறுகையின் காரணமாக இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது, நீதிமன்றம் குறிப்பிடும் கால கெடுவிற்குள் பிரதிவாதிகள் வாதிக்கு சொந்தமான பிரதிவாதிகள் வசம் உள்ள 600 சதுரடி மனை, அதிலுள்ள கீற்று வீட்டையும் வாதி வசம் ஒப்படைக்க கோரியும், பிரதிவாதிகள் வசம் உள்ள காலிமனை மற்றும் கீற்று வீட்டில் எவ்வித கட்டுமானமும் பிரதிவாதிகளோ

**அவர்களது ஆட்களோ, ஏஜெண்டுகளோ கட்ட கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு கோரியும், இந்த வழக்கு செலவுத்தொகை கோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

Plaintiff called absent. No representation. This case is posted for Trial in Special list today. But trial not commenced by Plaintiff side. There is no scope to adjourn the case. Hence this Suit is dismissed for default. No costs.

2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 23ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/– மா. சந்திரமோகன்)
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>நேரிய/வரைவு தீர்ப்புரை</u>**
அசல் வழக்கு எண். 160/2022
நாள். 23.06.2026.